# முன்னானவைகள்



– சகோதரி. நிஜா ஜென்னடி

*லோத்தின் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள்.*

*- ஆதியாகமம் 19 : 26*

லோத்து என்பவன் சோதோமில் குடியிருந்தான். சோதோமின் ஜனங்கள் கொடிய பாவிகளாயிருந்தனர். அவர்கள் துணிகரமான பாவங்களில் ஈடுபட்டனர். அதனால் கர்த்தர் அதை அழிக்க தீர்மானித்தார். கர்த்தருடைய தூதர்கள் சோதோமை அழிக்க வந்தார்கள். அவர்கள் லோத்துவிடம், நாங்கள் இந்த பட்டணத்தை அழிக்கப்போவதால் நீங்களும் உங்களுக்குரிய எவர்களாவது இருந்தால் இந்த இடத்திலிருந்து வெளியேறிச் செல்லுங்கள் என்று கூறினர். லோத்து அவர்களை அழைப்பதில் தாமதித்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதர்கள், லோத்து, அவன் மனைவி மற்றும் பிள்ளைகளின் கைகளையும் பிடித்து, அவர்களை பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய்விட்டார்கள். பின்பு தூதன் லோத்திடம் உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடிப்போங்கள். இந்நகரத்தைத் திரும்பிப் பார்க்காதீர்கள். இந்த சமவெளியில் எங்கும் நிற்காதீர்கள் என்று கூறினான். கர்த்தர் சோதோம் கொமோரா பட்டணங்களின் மீது வானத்திலிருந்து கந்தகத்தையும், அக்கினியையும் வரப்பண்ணி, அந்த பட்டணங்களையும், சமபூமியனைத்தையும், பூமியின் பயிரையும், அதன் எல்லா மக்களையும்



அழித்துப்போட்டார். அப்படி அழித்துக் கொண்டிருந்தபோது, லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்தாள். அதனால் அவள் உப்புத்தூண் ஆனாள்.

லோத்து நீதிமானாக இருந்ததால் தேவன் அவனையும் அவனது குடும்பத்தையும் காப்பாற்றி அழிவுக்கு விலக்கி பாதுகாத்து பட்டணத்தை விட்டு வெளியேறச் செய்தார். தேவன் அவர்களது ஜீவனைப் பாதுகாத்தும், லோத்தின் மனைவி அதை உணர்ந்து கொள்ளாமல், தான் விட்டு வந்த பொருட்கள், ஆஸ்திகள் மேல் உள்ள ஆசையினால், தேவனுக்கு கீழ்ப்படியாமல் நகரத்தை திரும்பிப் பார்த்து உப்புத்தூணாக மாறினாள். பொருளாசை தன்னை-யுடையவர்களின் உயிரை வாங்கும் (நீதிமொழிகள் 1:19). தேவன் பின்னிட்டு பார்க்காதே என்று கூறியபின்பும் தேவ வார்த்தையை முழுமையாக நம்பாமல் உலகத்தைப் பற்றிக்கொண்டு பழைய வாழ்க்கையை நினைத்து பார்த்து திரும்பினாள். தேவன் நம்மை கரம்பிடித்து வழிநடத்தும்போது, அவரையே முழுமையாக நம்பியிருக்க வேண்டும். பழைய வாழ்க்கையை திரும்பிப் பார்க்கக் கூடாது. அவள் திரும்பிப் பார்க்காமல் ஓட முன்வரவில்லை. நாமும் பழைய வாழ்க்கையில் உள்ள பாவங்களை திரும்பிப்பார்க்கக் கூடாது. அந்த பாவங்கள் நம்மை தேவனுக்குள் வளரவிடாதபடி தடை செய்து விடும். ஒன்று தேவனுக்கு பிரியமான ஒரு வாழ்க்கை வாழ வேண்டும். அல்லது தேவனல்லாத உலகத்தின் வழியில் செல்ல வேண்டும். இரண்டு எஜமான்களுக்கு ஒரே சமயத்தில் வேலை செய்ய முடியாது. நாம் எப்படியாக இருக்கிறோம்? உலகபொருட்கள் மேல், பணத்தின்மேல் அதிக ஆசை விருப்பம் வைத்துகொண்டு அதே நேரத்தில் தேவனை நோக்கி முன்னேறி செல்ல முயற்சிக்கிறோமா? உலகப்பொருட்கள்மேல் ஆசையை வைத்துக்கொண்டு தேவனையும் நாம் நேசிக்க முடியாது. நமக்கு உலகப்பொருட்களின்மேல் பற்றுதலில்லாமல் இருந்தால்தான், அவை நம்மைவிட்டு போகும்போது



கூட, நாம் அவற்றை விட்டுவிட ஆயத்தமாயிருப்போம். லோத்தின் மனைவியை நினைத்து நாம் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

## முழுமையான அர்ப்பணிப்பு

*இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது.*

*- மத்தேயு 6 : 24*

நாம் ஒவ்வொருவரும் நம்மை ஆளுகிற ஒரு தேவன் இருக்கிறார் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். தேவனுக்கென்று வாழ நம்மை ஒப்புக்கொடுத்தால், முழுமையாக தேவனுடைய வழியில் நாம் நடக்க வேண்டும். இல்லையென்றால் உலகப்பிரகாரமான வழியில் நடக்க வேண்டும். தேவனுடைய வழியை தெரிந்து கொண்ட பின்னர் உலகப்பிரகாரமான வழியில் நாம் திரும்பிப் போகக்கூடாது. அப்படிப் போனால் நம்முடைய வாழ்க்கை, முன்னிலைமையைக் காட்டிலும் பின்னிலைமை மகாக்கேடுள்ளதாய் மாறிவிடும். கர்த்தருக்கென்று ஒரு மனிதன் வாழ தீர்மானித்தால், அவன் பழைய வாழ்க்கையில் செய்து வந்த பாவங்களான பண ஆசை,பொருளாசை, திருடுதல், ஏமாற்றுதல், பொய் பேசுதல், பெருமை பேசுதல், மிகைப்படுத்தி பேசுதல், மனிதர்களை புகழ்ந்து பேசுதல், விபச்சாரம்,..இன்னும் ஒவ்வொருவரும் தாங்கள் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் முன் செய்த பாவங்களை திரும்பவும் செய்யக்கூடாது. அந்த பாவங்களுக்கு திரும்பவும் அடிமையாகி விடக்கூடாது. நாம் எந்த பாவத்திற்கு அடிமையாய் இருந்தோமோ அதே பாவத்தை செய்வதற்கான அநேக சூழ்நிலைகளை சாத்தான் நம் வாழ்க்கையில் கொண்டு வருவான். நாம் அதை இனங்கண்டுகொண்டு அதற்கு விலகி, தேவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, நாம் அந்த பாவங்களை மேற்கொள்ளலாம். தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான். சிலர் துணிகரமாக மற்றவர்களை ஏமாற்றுவார்கள். சர்வ சாதாரணமாக பொய் பேசுவார்கள், பழைய பாவங்களை செய்வார்கள். ஏனென்றால் இயேசு கிறிஸ்துவிடம் பின்பு மன்னிப்பை பெற்றுக் கொள்ளலாம் என்று அறிந்தே பாவங்களில் ஈடுபடுவார்கள். பின்பு ஒரு பாவமும் செய்யாதவர்கள் போல மிகவும் நல்லவர்களைப் போல, தங்களைத் தாங்களே



மேன்மைப்பாராட்டிக்கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனிடமிருந்து வரும் ஆசீர்வாதங்களை இழந்து போவார்கள் என்பதை அறியாது மறுபடியும், மறுபடியும் பாவம் செய்து தேவனை வேதனைப்படுத்தி அவருடைய நாமத்துக்கு பரிசுத்த குறைச்சல் உண்டாக்குபவர்களாகக் காணப்படுவர். இயேசு கிறிஸ்துவை அறியாதவர்கள், இப்படிப்பட்டவர்கள் செய்யும் பாவக்காரியங்களைக் காணும்போது, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமலேயே போய்விடுவார்கள். தாங்களும் கிறிஸ்துவண்டை முழுமையாக வராமல், மற்றவர்களுக்கும் இடறலாகக் காணப்படுவர். முக்கியமாக கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன்வருபவர்களுக்கு இடறலாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களே குந்தி குந்தி நடப்பவர்கள் என்று எலியா தீர்க்கதரிசி கூறியிருக்கிறான். (1 இராஜாக்கள் 18 :21) இயேசுவை ஏற்றுக் கொண்டால், இயேசுவைப் போல ஒரு வாழ்க்கை வாழ வேண்டும். அனுதினமும் வேதத்தை வாசித்து அதன்படி நடந்தால் இயேசுவைப்போல வாழலாம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வந்து எப்படி வாழ்ந்தாரோ, அதுபோல நாம் வாழ கற்று கொள்ள வேண்டும்.

## உலக ஆசை

உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள் என்று வேதம் கூறுகிறது. உலகமும், உலகத்தில் உள்ளவைகளும் அழிந்து போகும். தேவனே நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். ஒருவன் இந்த உலகத்தை நேசித்தால் பிதாவின் அன்பு அவனிடத்திலில்லை (1 யோவான் 2 : 15). மாறாத தேவனிடத்தில் மட்டும் நாம் அன்பு கூர வேண்டும். பணத்தின் மேலும் உலக பொருட்கள் மீதும் நம் ஆசை இருக்கிறதா? சம்பாதிப்பதிலும் பணத்தை சேர்த்து வைப்பதிலும் மட்டும் நம் எண்ணங்கள் இருக்கிறதா? அல்லது கர்த்தர்மேல் அன்பு வைத்திருக்கிறோமா?

*ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டா-னவைகள்.*

*- 1 யோவான் 2 : 16*

மாம்சத்தை திருப்திப்படுத்தும் காரியங்கள் மேல் அதீதமான ஆசை வைப்பது, நாம் பார்க்கின்ற பொருட்கள்மேல் அளவுக்கு மீறி ஆசைப்படுவது,

நாம் உபயோகப்படுத்தும் பொருட்கள், பதவி, படிப்பு, நண்பர்கள், அந்தஸ்து, ஐசுவரியம் ஆகியவற்றை வைத்து பெருமை கொள்வது ஆகியவை உலகத்தினாலுண்டானவைகள்.

ஏவாளுக்கு தேவன் புசிக்கக்கூடாது என்று சொன்ன கனி (நன்மை தீமை அறியத்தக்க) அவளுடைய பார்வைக்கு இன்பமாய் இருந்தது. இங்கு கண் பார்வையினால் இச்சை ஆரம்பிக்கிறது. நாம் எவற்றை பாக்க்கிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். ஏவாள், தேவனுக்கு கீழ்ப்படியாமல், அந்தக் கனிமேல் ஆசைப்பட்டு அதைப் புசித்தாள். தன் சுயவிருப்பத்தின்படி நடந்தாள். தேவனுடைய ஆளுகைக்குள் இல்லாமல் தன்னையே அவள் ஆளுகை செய்தாள். சாத்தானால் அவளுக்குள் ஏற்பட்ட காரியங்கள்: 1. அவளுடைய கண்களுக்கு அந்த பழங்கள் பார்ப்பதற்கு அழகாக இருந்தது. 2. அதைப் புசித்தால் நன்றாக இருக்கும் என்ற எண்ணம். 3. அதைப் புசித்தால் தேவனைப்போல ஆகலாம் என்ற பெருமை. ஏனென்றால் கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, பெருமை அவளுக்குள் இருந்தது. நாமும் கண்களின் இச்சைக்கும், மாம்சத்தின் இச்சைகளுக்கும், நமக்குள்ளவற்றின் பெருமைக்கும் விலக்கிக் காத்து, கர்த்தரின் பெரிதான ஆலோசனையின்படி, நம்மை அவருடைய யோசனைக்கு ஒப்புக்கொடுத்து, நாம் நினைப்பதற்கும் வேண்டிக்கொள்வதற்கும் மேலான மெய்யான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வோம். எப்படி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து (மத்தேயு 4 : 1-11) இதேபோன்ற சோதனைகளை சாத்தானை எதிர்த்து மேற்கொண்டாரோ அதேபோல நாமும் ஜெபத்தோடு சாத்தானை வேத வசனத்தின்படி நடந்து மேற்கொள்வோம்.

## நினைவுகள் எதன் மேல்?

*மோசேக்கு நம்முடைய பிதாக்கள் கீழ்ப்படிய மனதாயிராமல், இவனைத் தள்ளிவிட்டு, தங்கள் இருதயங்களில் எகிப்துக்குத் திரும்பி,*

*- அப்போஸ்தலர் 7 : 39*

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தபோது, எகிப்தியரால் உபத்திரவப்படுத்தப்பட்டார்கள். எகிப்தியர் அவர்களை சுமைசுமக்கும் வேலையினாலும், சாந்தும் செங்கலுமாகிய இவைகளைச் செய்யும் வேலையினாலும், வயலில் செய்யும் சகலவித வேலையினாலும்,



கடுமையாய் நடத்தினார்கள். அவர்கள் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிடும் சத்தத்தை தேவன் கேட்டார். அவர்கள் படுகிற வேதனைகளை தேவன் அறிந்து, அவர்கள் பெருமூச்சைக் கேட்டு அவர்களை விடுவிக்கும்படி மோசேக்கு எரிகிற முட்செடியில் தரிசனமாகி தன்னை வெளிப்படுத்தினார். மோசேயை எகிப்திற்கு அனுப்பி, எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவித்து, பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்கு நேராக வழிநடத்திச் சென்றார். பகலிலே நிழலுக்காக மேகஸ்தம்பத்தினாலும், இரவிலே வெளிச்சத்திற்காக அக்கினி ஸ்தம்பத்தினாலும் வழிநடத்தினார். கர்த்தரே அவர்களோடு கூட இருந்து பாதுகாத்தார். இஸ்ரவேலர் புறப்பட்டு சென்றதை அறிந்த எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் அவனது சேனைகளுடன் பின்தொடர்ந்தான். இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடலுக்கு அருகே இருந்தபோது, பார்வோனின் சேனைகள், தங்களை நோக்கி வருவதைக் கண்டு பயந்தனர். ஜனங்கள் மோசேயை நோக்கி, “ ஏன் எங்களை எகிப்திலிருந்து பாலைவனத்தில் சாகும்படியாக அழைத்துக் கொண்டு வந்தீர்? எகிப்திலே நிம்மதியாக மரித்திருப்போமே. பாலைவனத்தில் மடிவதைக் காட்டிலும், எகிப்திலே தங்கி அடிமைகளாக இருப்பதே நலமாக இருந்திருக்கும்” என்றார்கள். பாருங்கள் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்ட தேவன் இப்பொழுதும் தங்களை விடுவிப்பார் என்பதை மறந்து, முறுமுறுக்கத் தொடங்கினர். மோசேயோ கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார், பயப்படாதீர்கள் என்று விசுவாசத்துடன் கூறினான் (யாத்திராகமம் 14 : 14). கர்த்தருடைய வார்த்தையின்படி, மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான். உடனே ஜலம் பிளந்து, பிரிந்து போயிற்று. இஸ்ரவேல் ஜனங்கள் சமுத்திரத்தின் நடுவில் உலர்ந்த தரையிலே நடந்து போனார்கள். எகிப்தியரும் அவர்கள் பின்னாலே பிரவேசித்தார்கள். ஜனங்கள் கடந்து சென்ற பின்பு, மோசே சமுத்திரத்தின் நேரே கையை நீட்டினான். அதனால் சமுத்திரம் முன்புபோல் திரும்பவந்து, எகிப்தியரின் சேனைகளை கடலின் நடுவே மூழ்கடித்தது. எகிப்தியர் யாவரும் தண்ணீரில் மூழ்கி இறந்தனர். இப்படியாகக் கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின்



சேனைகளிடமிருந்து மீட்டார். அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும், அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் நம்பிக்கை வைத்தார்கள்.

ஆனால், இஸ்ரவேல் ஜனங்களோ உடனே தேவனுடைய செயல்களை மறந்து எகிப்தில் வாழ்ந்த பழைய வாழ்க்கையை நினைத்து முறுமுறுக்க ஆரம்பித்தார்கள். எகிப்து தேசத்தில் மிகுதியான உணவும் இறைச்சியும், தேவையான எல்லா உணவுகளும் கிடைத்தன. நீர் எங்களை பாலைவனத்திற்குள் கொண்டு வந்திருக்கிறீர். எகிப்து தேசத்தில் கர்த்தர் எங்களை கொன்று போட்டிருந்தால் நலமாயிருந்திருக்கும்; பசியால் நாங்கள் செத்து போகிறோம் என்று முறையிட்டார்கள். கர்த்தர் வானத்திலிருந்து மன்னாவை (தேவதூதர்களின் உணவு) அவர்களுக்கு உணவாகக் கொடுத்தார்.



தேவனுக்கு எதிராக பலமுறை ஜனங்கள் முறுமுறுத்த பின்பும் கூட தேவன் அவர்களை மன்னித்து, அவர்கள் கேட்டவைகளையெல்லாம் கொடுத்தார். என்றாலும் சிறு சோதனைகளை சந்தித்தவுடன் எகிப்தில் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்து பார்த்து, மோசேக்கு விரோதமாக பேசுகிறார்கள். இறைச்சியை உண்ண ஆசைப்பட்டார்கள். அவர்கள் எகிப்தில் இருந்தபோது மீன்களும், கொம்மட்டிக்காய், கீரை, வெங்காயம், வெள்ளைப்பூண்டு போன்ற நல்ல காய்கறிகளும் எங்களுக்கு கிடைத்தன. ஆனால் இப்பொழுதோ இந்த மன்னாவை மட்டுமே உண்கிறோம் வேறு எதையும் புசிப்பதில்லை என்று மறுபடியும் முறுமுறுத்தார்கள். கர்த்தர் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார் என்பதையும், வனாந்தரத்தில் கர்த்தர் கூட இருந்து வழிநடத்தி அவர்கள் கண்காண அற்புதங்களையும்,



அடையாளங்களையும் செய்தபின்பும் கூட, அடிமைத்தனத்தில் வாழ்ந்தபோது உண்ட இறைச்சியையும், காய்கறிகளையும் நினைத்து, தங்களுக்கு அவைகள் இல்லை என்று வருத்தமடைகிறார்கள். கர்த்தர் அவர்களோடு கூட இருந்து வழிநடத்துவதை மறந்துபோய் முறுமுறுத்து, கர்த்தருக்கு கோபமூட்டினார்கள். கர்த்தர் அவர்களுக்குச் செய்த நன்மைகளை நினைத்து நன்றி சொல்லாமல் இல்லாததை நினைத்து வருத்தமடைகிறார்கள். அவர்கள் கர்த்தரை நோக்கி கேட்டிருந்தால் அவர்கள் தேவைகளை, விருப்பங்களை தேவன் நிறைவேற்றியிருந்திருப்பார். கர்த்தருடையபிரசன்னம் நம்மோடுகூட இருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம்; அதை இந்த ஜனங்கள் அறியாமல், அழிந்து போகின்ற சரீரத்தின் இச்சைகளை நிறைவேற்றுவதில் வாஞ்சையாயிருந்தார்கள்.

*தங்கள் இச்சைக்கேற்ற போஜனத்தைக் கேட்டு, தங்கள் இருதயத்தில் தேவனைப் பரீட்சை பார்த்தார்கள்.*

*- சங்கீதம் 78 : 18*

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய பிரசன்னத்தை உணரவில்லை. தேவன் தங்களை பாலும், தேனும் ஓடுகிற தேசத்திற்கு கொண்டு செல்கிறார் என்ற எண்ணம் இல்லாமல் உடனடியாக தேவைகள் சந்திக்கப்படாததால் முறுமுறுத்து தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தார்கள். போஜனத்தின் மேல் அதிகமாக ஆசை இருந்தது. அது இச்சையாக மாறியது. தேவன் அவர்கள் இச்சித்த இறைச்சியைக் கொடுத்தார். அவர்கள் இறைச்சியை சாப்பிட்டு முடிக்கும் முன்பே தேவனுடைய கோபம் வந்தது. இறைச்சி மேல் அதிக ஆசை கொண்டவர்கள் யாவரும் மரித்து போனார்கள்.

பிரியமானவர்களே! தேவன் நம்மைக் குறித்து என்ன திட்டம் வைத்திருக்கிறாரோ அதை அடைவதே நம்முடைய குறிக்கோளாக இருக்க வேண்டும். நமக்கு இப்பொழுதுள்ள அன்றாட தேவைகள் சந்திக்கப்படவில்லை என்பதற்காக நாம் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்து பாவம் செய்யக் கூடாது. அப்படி நாம் முறுமுறுத்திருந்தால் மன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். நம் தேவன் இரக்கமுள்ளவர், மன்னிக்கிறவர். நாம் குறைகூறாமல் தேவனை நோக்கி ஜெபிக்கும்போது, தேவன் நம் தேவைகளை எல்லாம் சந்திப்பார். நமக்கு எப்பொழுது, எது தேவை என்பதை கர்த்தர் நன்கு அறிவார். அவர் அதினதை அதினதன் காலத்திலே நேர்த்தியாய் செய்து வைத்திருக்கிறார். நம்முடைய ஆசைகள் நிறைவேற்றப்படவில்லை என்ற காரணத்திற்காக தேவனை நாம்

மறந்துவிடக் கூடாது. தேவன் செய்த நன்மைகளை நினைத்து துதிக்கும்போது, நம்முடைய ஆசீர்வாதத்திற்கான தடைகள் எல்லாம் நீங்கிப்போகும். தேவன் நமக்கு என்ன கொடுத்திருக்கிறாரோ, அவற்றில் நாம் திருப்தியோடும், நன்றியுணர்வுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

இஸ்ரவேலர், தேவனுக்கு நேராக தங்கள் இருதயத்தை திருப்பாமல் எகிப்திற்கு நேராக தங்கள் இருதயத்தை திருப்பினார்கள். தேவனுக்கு கீழ்ப்படிய மறுத்து மறுபடியும் எகிப்துக்கு போக விரும்பினர். மோசேயோடு வாக்குவாதம் பண்ணி, அவனை வேதனைப்படுத்தினார்கள். அவர்களுடைய இருதயம் கடினமாயிருந்தது. கர்த்தருக்கு இணங்காதவர்களாக, தங்கள் சுயவழியில் நடந்து, பிடிவாதம் பிடித்தவர்களாக, அடங்காதவர்களாக, தேவனுடைய சித்தத்தை புறக்கணிக்கிறவர்களாக, அசட்டைபண்ணினவர்களாக இருந்தனர். சிலர் தேவனை பரீட்சை பார்த்து, வனாந்தரத்திலே அழிக்கப்பட்டார்கள். என்றாலும் நாற்பது வருடங்களாக தேவன் அவர்களிடத்தில் பொறுமையாயிருந்து, அநேகந்தரம் தேவனுக்கு எதிரானவைகளை செய்தபோதும் கிருபையாய் மனமிரங்கினார். அப்படிப்போல நம்முடைய காரியத்திலும் தேவன் நம்மோடு கூட இருந்து, எல்லாவற்றையும் நடத்திக் கொண்டு இருக்கிறார். அவர் செய்கிற எல்லாவற்றையும் நாம் அறிந்து கொள்ள முடியாது. நம்முடைய எண்ணத்தின்படி, மனவிருப்பத்தின்படி, எதிர்பார்ப்பின்படி காரியங்கள் நடக்கவில்லை என்றால், கர்த்தர் செய்யவில்லை என்று அர்த்தம் அல்ல. அவர் எப்போதும் நமக்கு காரியங்களை நடப்பித்துக்கொண்டுதான் இருக்கிறார். அதை மனித அறிவினாலும், ஞானத்தினாலும் அறிந்து கொள்ள முடியாது.

***பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி,***

*- பிலிப்பியர் 3 : 13*

இஸ்ரவேல் ஜனங்கள் தற்காலிகமாக கடந்த காலத்தில் கிடைத்த சிற்றின்பங்களை நினைத்தார்களேயொழிய, எதிர்காலத்தில் தங்களுக்கு தேவன் வைத்திருக்கும் ஒப்பற்ற மிகப்பெரிய ஆசீர்வாத்தை மறந்து போனார்கள். கர்த்தர் தங்களைக் குறித்து என்ன நினைவு கொண்டிருக்கிறார் என்பதை விட்டுவிட்டு தங்களுக்கு தாங்களே நினைவு கொண்டவர்களாக இருந்தார்கள். தேவன் தங்களை கடந்த காலத்திலே விடுவித்ததையும், தங்களை பாதுகாத்து, கூடவே இருந்து நடத்துவதை கண்டும் தங்கள் நினைவுகளிலேயே உழன்று கொண்டிருந்தார்கள். இன்றும் நம்மில் அநேகர், நம்மைக் குறித்தும், நம்முடைய பிள்ளைகளைக் குறித்தும் கர்த்தர் நினைவாக



இருக்கிறார் என்பதை மறந்து போய் காணப்படுகிறோம். அதனால் நாமே பல நினைவுகளைக் கொண்டு திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம். மனுஷனுடைய யோசனைகளெல்லாம் வீண் என்று வேதம் சொல்லுகிறது. நான் நிர்ணயித்தபடியே நடக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். நம்முடைய நினைவுகளின்படி நாம் செய்யும்போது, அது துன்பத்தைத் தரும். ஆனால், நம்மைக்குறித்த கர்த்தருடைய நினைவுகளோ சமாதானத்தைத் தரும். அது வேதனை தராது (எரேமியா 29 : 11, நீதிமொழிகள் 10 : 22).

நம்முடைய நினைவுகளைப் பார்க்கிலும் கர்த்தருடைய நினைவுகள் மேலானவைகள். நம்முடைய வழிகளைக் காட்டிலும் கர்த்தருடைய வழிகள் மேலானவைகள். அப்படிப்பட்ட மேலான நினைவுகளுக்கும், வழிகளுக்கும் நாம், நம்மை ஒப்புக்கொடுப்போம். நம் பரம தகப்பனிடமிருந்து பெரிதான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிக்கை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

உள்நாட்டு வருட சந்தா ரூ. 200/-

வெளிநாட்டு வருட சந்தா ரூ. 2000/-

*S. PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD / M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். ICICI வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.*

*ICICI* வங்கி கணக்கின் பெயர் : *S. PAULRAJ KENNEDY*

*ICICI* வங்கி கணக்கு எண் : 0350 0150 7744

***எங்களது முகவரி***

எஸ். பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2, தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு. இந்தியா.



இந்த பத்திரிக்கையை நீங்கள் படித்துவிட்டு மற்றவர்களுக்கும் படிக்கக் கொடுங்கள். எங்களுக்காகவும், எங்களுடைய ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், பிரசன்னமும் எப்போதும் உங்களோடு இருப்பதாக!

***உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்***

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com**

***இணையதளம் :*** **www.kennedyministries.org**




www.creflodollarministries.org

நாமெல்லோரும் கர்த்தரிடமிருந்து தாலந்துகளை பரிசாகப் பெற்றிருக்கிறோம். எல்லோருமே பிறக்கும்போதே கர்த்தரால் அப்படி உருவாக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். திறமைகளை கற்றுக் கொள்ளலாம். ஆனால், தாலந்துகள் கர்த்தரால் கொடுக்கப்படுபவை. அதனால், அவைகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் முயற்சி செய்ய வேண்டியதில்லை. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், ஏற்கனவே உங்களுக்குக் கொடுக்கப்பட்டவைகளைக் கண்டறிய வேண்டியதுதான். இந்தத் தாலந்துகள் ஒருவருக்கொருவர் கொடுக்க வேண்டியவை. கர்த்தர், எவற்றையெல்லாம் உங்களுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவைகளெல்லாம் உங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு அல்ல, மற்றவர்களுக்காகப் பயன்படுத்தவே. என்னுடைய அபிஷேகம், எனக்காக அல்ல, அது உங்களுக்காக. அதனால், நமக்குக் கொடுக்கப்பட்டத் தாலந்துகளை இந்த உலகத்தில் பயன்படுத்தும்போது கவனமாக இருக்க வேண்டும்.

நமக்குக் கொடுக்கப்பட்டவைகளுக்கு நாம் நிர்வாகி மட்டுமே, முதலாளி அல்ல. நீங்கள் கேட்கலாம் : புதிய ஏற்பாட்டின்படி நாமெல்லோரும் தேவனுடைய பிள்ளைகள், அடிமைகளல்ல என்று. புதிய ஏற்பாட்டில் பிள்ளைகள் என்று குறிப்பிடப்படுவதின் அருமையான காரியம் என்னவென்றால், பிள்ளைகளாக இருக்கும் நாம் வேலைக்காரனாகவோ, அடிமையாகவோ இருக்கத் தெரிந்து கொள்ளலாம். எப்படி இயேசு கிறிஸ்து, பிதாவின் காரியங்களைச் செய்ய தம்மை பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தாரோ, அந்தப்படியேத்தான் நமக்கும். நீங்கள், ஆலயத்தில் எல்லா வேலைகளையும் நீங்களாகவே எடுத்துச் செய்யலாம், அங்கே வேலை பார்ப்பவராக இல்லாமலே. அப்படி இருக்க அப்படிப்பட்ட இருதயம் வேண்டும்.

நாம் எப்போது வேண்டுமானாலும் கர்த்தரால் பயன்படுத்தப்பட, அவருக்குக் கிடைக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். உண்மையான ஊழியக்காரர்கள் தங்களுக்கு அசௌகரியமாக இருக்கும்போதும், கர்த்தருடையத் தேவையை செய்பவர்களாக இருப்பார்கள் (கர்த்தர் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நம்முடையத் தேவைகளை சந்திப்பதுபோல). ஊழியம் செய்பவர்கள் எப்போதும் அடுத்தவரின் தேவையை சந்திப்பவர்களாக இருப்பார்கள். ஊழியம் செய்பவர்கள், கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்போது எவ்வளவு தடைகள் வந்தாலும் அதைச் செய்பவர்களாக இருப்பார்கள். கர்த்தருக்காக ஒரு காரியத்தை செய்யும்போது, நீங்கள் உங்களது அந்தஸ்தை பார்க்கமாட்டீர்கள் . அந்தக்காரியம் அற்பமாய் காணப்படாது.

உங்களது வாழ்க்கை, ஒரு விதையைப்போல. ஒரு விதையைப் போல உங்கள் உங்கள் வாழ்க்கை விதைக்கப்பட்டால்தான் முழுமையான வாழ்வின் பலனை அடைய முடியும். நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே என்னுடைய ஊழியக்காரர்களும் இருக்க விரும்புகிறேன். உங்கள் வாழ்க்கையை கர்த்தருக்காக விதைத்தால் கர்த்தரோடு



இருப்பீர்கள்.

ஒரு மனிதனுடைய சித்தம் என்பது அவனது வாழ்க்கை. அதேபோல கர்த்தருடைய சித்தம் என்பது கர்த்தரது வாழ்க்கை. கர்த்தருடைய வாழ்க்கையை நாம் வாழவேண்டுமென்றால், நமது வாழ்க்கை சாக வேண்டும். சுயநலம், இது என் வாழ்க்கை, என் சித்தம் இப்படிப்பட்ட எண்ணங்களெல்லாம் சாக வேண்டும். உங்களது சித்தத்தை உங்களது வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டுமென்று பிடிவாதமாக இருப்பீர்களென்றால், நீங்கள் கர்த்தருக்கு எதிராக போராடுகிறீர்கள் என்று அர்த்தம்.

உங்களது வாழ்க்கை, கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கிறது. நீங்கள், உங்கள் சித்தப்படியும் வாழலாம். கர்த்தர் சித்தப்படியும் வாழலாம். இயேசு கிறிஸ்து, உங்கள் மூலமாக வாழ விரும்புகிறார். அவருடைய சித்தம் உங்கள் வாழ்வில் நிறைவேறும்போது, அவர் உங்கள் மூலமாக வாழ்கிறார். அதற்கு உங்கள் சித்தம் விதையைப்போல மடிய வேண்டும். ஏன் இப்படி செய்ய வேண்டும்? உங்களது வாழ்வின் பரிபூரண பலனை நீங்கள் அறுவடை செய்யவே. நீங்கள் நினைக்கிறீர்கள் : கர்த்தருடைய சித்தத்தை செய்வது என்பது நீங்கள் வாழும் வாழ்க்கையைவிட மலிவானது என்று. அது உண்மையல்ல. உங்களது சித்தத்தை செய்வீர்களென்றால் கிருபை கொஞ்சகாலம் மாத்திரமே இருக்கும். அதற்கு பின்பு உங்கள் வாழ்க்கை பின்னடையும். நம்முடைய வாழ்க்கையை எப்படி நன்றாக நடத்திச் செல்வது என்று ஆண்டவரைவிட நமக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறோம். ஆனால் நாம் வாழும் வாழ்க்கைக்கு எது சிறந்தது என்பதை நம்மைவிட கர்த்தருக்கே நன்கு தெரியும். கர்த்தருடைய சித்தத்தை நாம் செய்வதினால் எதையாவது இழந்து விடுகிறோம் என்று நினைத்தீர்களென்றால், நீங்கள் முன்னோக்கிச் செல்பவர்களாக இல்லாமல், பின்னோக்கிச் செல்பவர்களாக இருப்பீர்கள். எல்லாவற்றையும் இழந்து போனீர்கள். கர்த்தர் உங்களை நேசிக்கிறார். உங்களை பின்னோக்கித் தள்ளவோ, குன்றிப்போகச் செய்யவோமாட்டார். உங்களது வாழ்க்கையில் எப்படி சந்தோஷத்தைக் கொண்டு வருவது என்பதை கர்த்தர் அறிவார். உங்களது சித்தம் போய், கர்த்தருடைய சித்தம் உங்கள் வாழ்க்கையில் நடக்கும்போதே அந்த சந்தோஷத்தை நீங்கள் அறிய முடியும் என்னுடைய வாழ்க்கையின் சிறப்பான விளைச்சலை, கிறிஸ்து இயேசு என் மூலமாக வாழும்போதுதான் பெற முடியும். ஒவ்வொரு முறையும் நான், என் சுய இஷ்டப்படி என் வாழ்க்கையை வாழ முயற்சிக்கும்போதும், இயேசு கிறிஸ்து, அவருடைய வாழ்க்கையை, அவருடைய வழியில் என் மூலமாக வாழ்வதைத் தடை செய்கிறேன்.

கிறிஸ்தவர்கள் என்று தங்களை சொல்லிக் கொள்பவர்கள் தங்களுடைய வாழ்க்கையை வாழ மிகவும் போராடுகிறார்கள். தங்களுடைய கனவை, எதிர்பார்ப்பை நிறைவேற்ற மிகவும் பிரயாசப்படும் இவர்கள், ஒரு தடவைகூட கர்த்தரிடம் “நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? என்னுடைய வாழ்க்கையைக் குறித்த உம்முடைய சித்தம் என்ன?, நான் எங்கே வாழ விரும்புகிறீர்?, என்னுடைய வேலை என்ன?” என்று கேட்டதில்லை. நாம் என்ன செய்யலாமென்று ஒவ்வொரு முறை நாமாக தீர்மானிக்கும்போதும், அது குழப்பத்தில் போய் முடிகின்றது. உங்களை உருவாக்கினவரை அணுகி, உங்களை உருவாக்கினதன் நோக்கத்தை அறிய வேண்டாமா?

சிலர், கர்த்தருடைய சித்தத்திலிருந்து கொஞ்சப் பகுதியை மட்டும் எடுத்துக் கொள்வார்கள், அவர்கள் சித்தம் முழுவதையும் கர்த்தர் சித்தம் நிறைவேற்றும்போது. ஆனால், கஷ்டம் வரும்போது, துன்பப்படும்போது, உங்களது சித்தத்தை பல வருடங்களாகச் செய்து களைத்தும், வெறுத்தும்போதும்போது, உங்கள் முழங்கால்களை முடக்கி, கர்த்தரிடம், அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தும்படி கேட்பீர்கள். தேவ சித்தத்திற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். பரிபூரண பலனை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

# கேட்கிறதைக் கவனியுங்கள் ⑤



*ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொண்டதி-னாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.*

*- 1 தெசலோனிக்கேயர் 2 : 13*

இங்கே, அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வது : அவன் பிரசங்கம் செய்தபொழுது, தெசலோனிக்கேய சபையின் மக்கள் இது ஒரு மனுஷனுடைய பேச்சுதானே, மனுஷ வார்த்தைதானே என்று அசட்டை பண்ணாமல், தேவன், பவுல் மூலமாகப் பேசுகிறார் என்ற விசுவாசத்தோடு கேட்டார்களாம். அப்படி விசுவாசித்தவர்களே அந்த வார்த்தைகள் எந்த நோக்கத்தோடு வந்ததோ அதன் பலனைப் பெற்றுக்கொண்டார்களாம்.

இந்த வார்த்தை நமக்கும் பொருந்தும். வேதாகமத்தைப் படிக்கும்பொழுதும், பிரசங்கத்தைக் கேட்கும்பொழுதும், தீர்க்கதரிசனத்தைக் கேட்கும்பொழுதும், இது கர்த்தர் நம்மோடு பேசும் வார்த்தை என்ற விசுவாசத்தோடு கேட்க வேண்டும். இது மனுஷனுடைய பேச்சா அல்லது கர்த்தர்தான் நம்மோடு பேசுகிறாரா என்று எப்படி அறிந்து கொள்வது?.

கர்த்தர் நம்மோடு பேசினால், வேதத்தின் வார்த்தைகளைக் கொண்டே பேசுவார். ஆவிக்குரிய பிரமாணம் அதில் இருக்கும். அதாவது என் வார்த்தையின்படி நீ நடந்தால், இன்னின்ன ஆசீர்வாதங்களை உனக்குத் தருவேன் என்று சொல்வார். வெறுமனே நம்மை ஆசீர்வதிப்பது மாத்திரம் அவருடைய சித்தமல்ல. கர்த்தர் ஆபிரகாமை எப்படி ஆசீர்வதிக்கிறார் பாருங்கள்.

*கர்த்தர் ஆபிரகாமை நோக்கி : நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ.*

*நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் ; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.*

*உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.*

*- ஆதியாகமம் 12 : 1- 3*

ஆபிரகாமை ஆசீர்வதிப்பது மாத்திரம் கர்த்தர் சித்தமல்ல. அநேக ஜனங்களுக்கு ஆபிரகாமை ஆசீர்வாதமாக வைப்பதே கர்த்தர் சித்தம். அதேபோல கர்த்தர், யோசேப்பை ஆசீர்வதிக்கிற விதத்தைப் பாருங்கள் :

*கர்த்தர் யோசேப்போடே இருந்தார், அவன் காரியசித்தியுள்ளவனானான், அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான்.*

*கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு;*

*யோசேப்பினிடத்தில் தயவு வைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்.*

*அவனைத் தன் வீட்டுக்கும் தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் விசாரணைக்காரனாக்கினது முதற்கொண்டு, கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்; வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது.*

*- ஆதியாகமம் 39 : 2- 5*

தேவன், முதலாவது யோசேப்பை ஆசீர்வதிக்கிறார். எப்படி? அவன் செய்கிற காரியங்களையெல்லாம் செம்மையாகச் செய்ய வைக்கிறார். அவன் செய்யும் காரியத்தையெல்லாம் தோல்வியடையாமல், வெற்றியடையச் செய்கிறார். அடுத்தது, அதை அவனுடைய எஜமானுடைய கண்களால் காணும்படி செய்து, அவனுக்கு சொந்தமான எல்லாவற்றுக்கும் தலைவனாக உயர்த்தும்படி தயவு கிடைக்கச் செய்கிறார். அப்படி யோசேப்பை உயர்த்தினதினிமித்தம் அந்த எஜமானனை (போத்திபார்) கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். இப்பொழுது யோசேப்பு, அந்த எஜமானுக்கு ஆசீர்வாதமாக மாறிப்போனான். கர்த்தர், முதலாவது யோசேப்பை ஆசீர்வதிக்கிறார். பின்னர் அவனை மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக வைக்கிறார். இதன்மூலம் நாம், கர்த்தர் செயல்படும் விதத்தைக் காண்கிறோம். அதற்கும்மேலாக அவருடைய சிந்தையை அறிந்துகொள்கிறோம். தொடர்ந்து நாம் வேதத்தை படிக்கும்போதும், பிரசங்கங்களைக் கேட்கும்போதும், கர்த்தருடைய சிந்தையை அறிந்து கொள்கிறோம். பிரசங்கங்கள், தீர்க்கதரிசனங்கள், தரிசனங்கள் இவைகள் நம்மை நோக்கி வரும்போது, கர்த்தருடைய சிந்தை மற்றும் கர்த்தருடைய இருதயம் இந்த இரண்டையுமே பார்ப்போம். பேசுபவரையோ, பேச்சையோ பார்க்கமாட்டோம். கர்த்தருடைய சிந்தையையும், அவருடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும் மனதுருக்கத்தையும், அன்பையுமே பார்ப்போம். இதுவே கர்த்தருடைய விருப்பமாகும். பிரசங்கம், சொப்பனம், தரிசனம், தீர்க்கதரிசனம் மூலம் கர்த்தர், நம்மீது வைத்துள்ள அன்பையும், மனதுருக்கத்தையும், கிருபையையும், தயவையும் வெளிப்படுத்துகிறார். அதனால், கேட்கிறதைக் கவனியுங்கள். கர்த்தர் நம்மோடு பேசுகிறார் என்பதையும், எந்த நோக்கத்தோடு, எதிர்பார்ப்போடு பேசுகிறார் என்பதையும் கருத்தில்கொண்டு கவனமாகக் கேளுங்கள். கர்த்தர் உங்களை அப்படியாக ஆசீர்வதித்து வழி நடத்துவாராக. ஆமென்!

- தொடரும்